**STC.No.877/2015 Date: 20.05.2026**

ம.சா.1 சுப்பிரமணியன், த.பெ. நடராஜன்

எதிரி ஆஜர்.

(சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

**குறுக்குவிசாரணை:**

1. எனக்கு எதிரியை காரங்காடு ஊரில் வரவு செலவு பண்ணியதால் பழக்கம். எதிரிக்கு தேவகோட்டையில் உள்ள என் வீட்டில் வைத்து பணம் கொடுத்தேன். பணம் கொடுத்ததாக சொல்லும் சமயத்தில் யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் நான், எதிரி, என் மனைவி, எதிரி அழைத்து வந்திருந்த எதிரிக்கு அக்கா முறை என்று சொன்ன சேசுராணி. பொதுவாக நான் பணம் கொடுத்து வாங்கும்போது நபரிடம் என்ன என்ன ஆவணங்கள் வாங்குவேன் என்றால் நிரப்பட்ட காசோலை வாங்குவேன். எதிரியிடம் வேறு எந்த ஆவணமும் வாங்கவில்லை.

2. எதிரி என்னிடம் பணம் வாங்கும்போது திருமணம் ஆகாத நபர் என்றால் ஆமாம், என்னிடம் திருமணம் ஆகாதவர் என்றுதான் சொன்னார். எதிரியின் அக்கா சேசுராணி என்னிடம் வரவு செலவு வைத்திருந்தார். சேசுராணி என்னிடம் எவ்வளவு பணம் வாங்கினார் என்றால் என்னிடம் நகை வாங்கி அதற்கு தவணை முறையில் கட்டி வந்தார். எதிரியின் வீடு சேசுராணியின் வீடு எனக்கு நன்றாக தெரியுமா என்றால் இல்லை நான் ஒரு பொதுவான இடத்தில் இருப்பேன் அவர்கள் தான் வந்து பணம் வாங்குவார்கள். நான் சொல்லும் பொதுவான இடம்

என்பது எது என்றால் நான் ஒரு வீட்டிற்கு போவேன் அந்த வீட்டுக்காரரின் பெயர் தற்போது ஞாபகமில்லை, அங்கிருந்துதான் வரவு செலவு செய்வேன். ஒரு பெண்ணுக்கு பணம் கொடுக்கும்போது அவரின் தாய் தந்தையிடம் கேட்டுதான் கொடுப்பேன் என்றால் எதிரி அவருடைய அக்காவை அழைத்து வந்திருந்ததால் பணம் கொடுத்தேன், எதிரியின் தாய் தந்தை பற்றி எனக்கு தெரியாது.

3. காரங்காடு கிராமத்திற்கு சென்று எந்த எந்த வருடங்களில் வரவு செலவு செய்தேன் என்றால் 2014 முதல் 2016 வரை செய்தேன், அதன்பிறகு என்னால் அங்கு செல்ல முடியவில்லை. 2014 ம் ஆண்டுக்கு முன்னதாக நான் எந்த வரவு செலவும் காரங்காடு கிராமத்தில் செய்யவில்லை. காரங்காடு கிராமம் என்பது சின்ன கிராமம் என்றும் அங்கு வரவு செலவு செய்த நபர்கள் விபரம் எனக்கு தெரியுமா என்றால் என்னிடம் வரவு செலவு வைத்த நபர்களை மட்டும் தெரியும் அவர்களது குடும்பத்தை பற்றி தெரியாது. காசோலை திருப்பப்பட்ட பின்பு நான் எதிரியை நேரடியாக சென்று கேட்டேன் என்றால் ஆமாம், அவர் சரியாக பதில் அளிக்கவில்லை. நான் எதிரியை தவிர எதிரி குடும்பத்தை சேர்ந்த வேறு யாரிடமும் காசோலை திருப்பப்பட்டதை பற்றி கேட்கவில்லை. எதிரிக்கு பணமாகதான் கடன் கொடுத்தேன். எதிரியின் அப்பா பெயர் தெரியுமா என்றால் எதிரியின் அப்பா பெயர் சேவியர் என்று எதிரி சொன்னார். எதிரியின் அம்மா பெயர் தெரியுமா என்றால் தெரியாது, அவருடைய அம்மாவுக்கு உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாக எதிரி சொல்லியிருந்தார்.

4. நீதிமன்றத்தில் இருந்து MP.3325/2015 ல் சென்ற அறிவிப்பில் எதிரி S.செங்கோல்அம்மாள் என்று கையெழுத்து இட்டுள்ளார் என்றும்

சேவியர் அப்பா பெயராக இருந்தால் X என்றுதான் முதல் எழுத்து வரும் என்று சொன்னால் எதிரி என்னிடம் அப்பா பெயர் சேவியர் என்றுதான் குறிப்பிட்டார். ம.சா.ஆ.1 காசோலையில் எதிரி X என்று முதலில் தான் குறிப்பிட்டு கையெழுத்திட்டுள்ளார் என்றால் ஆமாம், ஆனால் ம.சா.ஆ.4 ஒப்புதல் அட்டையில் எதிரி S.செங்கோல் அம்மாள் என்று கையெழுத்திட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, அவர் வேண்டும் என்றே மாற்றி கையெழுத்திட்டுள்ளார். நான் கொடுத்த காசோலை 2010ம் ஆண்டிற்கு முந்தைய CTS காசோலை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது, எதிரி கொடுத்த காசேலையைதான் கொடுத்தேன்.

5. எதிரிக்கு எத்தனை வட்டிக்கு பணம் கொடுத்தேன் என்றால் 2% வட்டிக்கு கொடுத்தேன். பணம் கொடுக்கும்போது வட்டியை எடுத்துக்கொண்டு கொடுத்தேனா என்றால் இல்லை. ஒருவேளை எதிரி நிரப்பிய காசேலையை கொடுத்திருந்தால் 3 மாத வட்டியையும் சேர்த்துதான் காசோலை வாங்கிருப்பேன் என்று சொன்னால் அவர் காசோலையை ஒரு பாதுகாப்பிற்காக கொடுப்பதாகவும் வட்டியை தனியாக தந்துவிடுவதாகவும் கூறினார். எதிரிக்கு ம.சா.ஆ.3 நோட்டீஸ் அனுப்பும்போது செங்கோல்அம்மாள் தந்தை பெயர் சேவியர், C/o.J.சேசுராணி என்று அனுப்பியுள்ளேன் என்றால் ஆமாம், அவர் கூறிய முகவரியில்தான் அனுப்பினேன். எதிரி அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அக்கா வீட்டில் இருப்பதாக சொல்லி அந்த முகவரியை எனக்கு கொடுத்தார். பொதுவாக ஒரு பெண்ணுக்கு ரூ.3,00,000/-த்தை வெறும் காசோலையின் அடிப்படையில் கடனாக கொடுத்துள்ளதாக பொய்யாக

சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வேறு எந்த ஆவணங்களும் வாங்காமல் வெறும் காசோலையை மட்டும் வைத்து பணம் கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. நான் பணம் கொடுத்து வாங்கும் நபர்களிடம் கடனுறுதி சீட்டும் சாட்சிகளிடம் பூர்த்தி செய்யப்படாத காசேலையை பெற்றுக்கொள்வது வழக்கம் என்றும் எதிரியிடம் எந்த ஆவணங்களும் பெறாமல் கடன் கொடுத்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தினசரி காரங்காட்டிற்கு செல்வேனா இல்லை வாரம் ஒரு முறை செல்வேனா என்றால் நகை கேட்டு எனக்கு போன் செய்தால் செல்வேன். காரங்காடு என்பது கிராமம்தான் என்றால் சரிதான். காரங்காட்டில் எத்தனை வீடுகள் இருக்கும் என்றால் உத்தேசமாக 100 வீடுகள் இருக்கும்.

7. எதிரிக்கு 09.02.2012 ம் தேதி திருமணம் நடந்தது எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது அவர் கூறினால்தானே தெரியும். எதிரிக்கு மகன் 26.11.2012 ம் தேதி பிறந்தார் என்பதும் எதிரியின் மகள் 20.11.2014 ம் தேதி பிறந்தார் என்பதும் தெரியுமா என்றால் தெரியாது, அவர் சொல்லவில்லை. நான் பணம் கொடுக்கும்போது உடல்நலம் சரியில்லாமல் இருந்ததாக சொல்லும் தாயார் 16.02.2012 ம் தேதியே இறந்துவிட்டார் என்பது தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் கணவர் பெயர் தெரியாது. எதிரியின் கணவர் பெயர் சக்ரியாஸ் என்பதால் தான் எதிரி வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் நீதிமன்றத்தில் இருந்து சென்ற சம்மனில் S என்று கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரியல்ல.

8. நான் பணம் வாங்கியதாக சொல்லும் சமயத்தில் எதிரியின் மகள் 3 மாத கைக்குழந்தையாக இருந்தார் என்றும் கைக்குழந்தையை ஊரில் விட்டுவிட்டு வந்து பணம் வாங்கியதாக சொல்லுவது பொய் என்றால் சரியல்ல. சேசுராணி வாங்கிய கடனுக்காக எதிரி சிறுபிள்ளையாக இருந்தபோது மகளிர் குழுக்களுக்காக கொடுக்க வைத்திருந்த காசோலையை நானே என் இஷ்டம்போல் கையெழுத்து செய்து எதிரி மீது இந்த வழக்கினை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.